சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் – திரு.சு.பாபு, த/பெ. காலஞ்சென்ற திரு.எஸ்.சுவாமிநாதன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
பணிகள் அலகு, பணி–9(1) பிரிவு

அரசாணை (3டி) எண்.88

நாள்.26.09.2022.
சுபகிருது வருடம், புரட்டாசி மாதம்–9,
திருவள்ளுவராண்டு–2053.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆகு3/2347400/2022, நாள் 18.07.2022.

***********

ஆணை:

வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரக பணியமைப்பைச் சார்ந்தவரும், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையில் (சென்னை புருவரீஸ் பி.லிமிடெட் கலால் மேற்பார்வை அலுவலகத்தில்) அலுவலக உதவியாளராகப் பணியாற்றி 07.12.2011 அன்று காலமான திரு.எஸ்.சுவாமிநாதன் என்பவரின் மனைவி திருமதி.எஸ்.காந்தா என்பவர் தனது மகன் திரு.சு.பாபு என்பவருக்கு கருணை அடிப்படையில், பணி நியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் விண்ணப்பம் அளித்திருந்தார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகத்தில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டு, தனியர் 15.02.2021 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், திரு.சு.பாபு என்பவரின் பணியினை வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகத்தில் கருணை அடிப்படையில் 15.02.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வேண்டி கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

//த.பி.பா//

2. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரையை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்த பின்னர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.சு.பாபு என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 15.02.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வினை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.15290/க்யூ2/2022-1, நாள் 27.08.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.3066624/ஜி2/2022, நாள்.13.09.2022ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 5.
திரு.சு.பாபு, இளநிலை உதவியாளர்
(கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் மூலமாக)

நகல்

தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
26/9/2022